Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 15, 2021

புதன்கிழமை டிசெம்பர் 15, 2021 | ஒளி: 07 கதிர்: 179 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free




# டெங்கினால் 19 பேர் மரணம்

பிரதான பொதுச் சுகாதார பிரச்சினையாக டெங்கு நோய் உருவாகியுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரைக்கும் 25,910 நோயாளர்களும் 19 மரணங்களும் பதிவாகியுள்ளன என, அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.
(மேலதிக செய்தி, பக்கம் 7இல்)

லிட்ரோவுக்கு வந்த எரிவாயு

# திருப்பி அனுப்பப்படுகிறது



லிட்ரோ எரிவாயு நிறுவனத்தால் நாட்டுக்கு கப்பல் மூலம் அண்மையில் கொண்டு வரப்பட்ட எரிவாயு தொகையை திருப்பி அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

எரிவாயுவின் தரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கைகள் மூலம், குறித்த எரிவாயுவில் உரிய செறிவுடன் கூடிய எதைல் மெர்காப்டன் உள்ளடங்காமை தெரியவந்துள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகாரிகள் சமீபத்திய இறக்குமதியை நிராகரித்தால், நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் என்றும், அதன் காரணமாக எதைல் மெர்காப்டனை தேவையான அளவு கையிருப்பில் சேர்த்து விநியோகிக்கலாமா என்பது தொடர்பில் நிபுணர்களின் கருத்தைப் பெற உள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

தேவையான அளவு எதைல் மெர்காப்டனை பூர்த்தி செய்யாத எரிவாயுவை சந்தைக்கு வெளியிடமாட்டோம் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண அறிவித்திருந்த நிலையிலேயே மேற்குறிப்பிட்ட செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை,

தொடர்ச்சி P2

# விடுமுறை கழிக்கும் நேரமல்ல!



ஜனாதிபதி, எதற்காக வெளிநாடு சென்றாரென என்னால் கூறத் தெரியாதுள்ளது எனத் தெரிவித்த, ஆளும் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா, அனைவருக்கும் நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும். வெளிநாடு சென்று விடுமுறையைக் கழிப்பதற்கான நேரம் இதுவல்ல என்றார்.

நாடு தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடி,

தொடர்ச்சி P2

சிலிண்டரின் உள்ளீடை காட்சிப்படுத்த முடியுமா?

# லிட்ரோவுக்கு அவகாசம்



எரிவாயு சிலிண்டரின் உள்ளே இருக்கக்கூடிய கலவை மற்றும் அந்தக் கலவையை உரிய சிலிண்டரில் காட்சிப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் தெரிவிக்க லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், இன்று (15) வரை கால அவகாசம் வழங்கியுள்ளது.

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்களால் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெற உத்தரவிடுமாறு கோரி சிவில் சமூக ஆர்வலர் நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த ரிட் மனுவை நீதிமன்றம், நேற்று (14) அனுமதித்தது.

தொடர்ச்சி P2

சிறுவர்களுக்கான

# மரண தண்டனையில் திருத்தம்

நீதிமன்றத் தத்துவப்படி குற்றமிழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு நபருக்கும் எதிராக மரண தண்டனையை விதித்தல் அல்லது குறித்துக் கொள்வதோ மேற்கொள்ளக் கூடாது. குறித்த தண்டனைக்குப் பதிலாக அந்நபர் ஜனாதிபதி விருப்பம் தெரிவிக்கும் வரைக்கும் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் தண்டனையை வழங்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையில் 53 ஆம்

தொடர்ச்சி P2

யுகதனவி விவகாரம்

# சட்டமா அதிபரின் பரிந்துரைகள் எங்கே?

**மக்கள் விடுதலை முன்னணி கேள்வி**



கெரவலப்பிட்டி, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 சதவீத உரிமையை மாற்றுவதற்கான ஒப்பந்தம் சட்டமா அதிபரால் அங்கிகரிக்கப்பட்டு நியூ போட்ரஸ் எரிசக்தி நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ

தொடர்ச்சி P2

கோப், கோபா குழுக்களின் தலைவர்களாக

# ராஜபக்‌ஷர்கள் நியமிக்கப்படலாம்



அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்), அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) ஆகிய குழுக்களுக்கு தனக்கு அரசியல் ரீதியாக நெருங்கியவர்களை நியமிப்பதற்காகவே, பாராளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளார் என ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (14) நடைபெற்ற

தொடர்ச்சி P2

வாள் வெட்டு குழுவைச் சேர்ந்த

# நால்வருக்கு விளக்கமறியல்

**மேலும் 11 பேருக்கு வலைவீச்சு**

■ செந்தூரன் பிரதீபன்

சுன்னாகம், புதுமடம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களையும், 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு, மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான், நேற்று (14) உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதியன்று,

தொடர்ச்சி P2

# அடுப்புகள் வெடித்தால் உடனடியாக அணுகவும்



சமையல் எரிவாயு அடுப்புகள் வெடிப்பது குறித்து அரசாங்கத்திடம் இதுவரை எந்தவொரு பதிலுமில்லையெனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, சமையல் எரிவாயு வெடிப்புகளால் சேதத்துக்கு உள்ளாகுபவர்களுக்கு இலவசமாக சட்ட உதவி வழங்கப்படும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாளுக்கு நாள் பலவீனமடையும் மோசமான கொள்கைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு பூராகவும் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பதால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளவர்களின் சார்பில், ஐக்கிய மக்கள் சக்தி இலவசமாக சட்ட உதவிகளை வழங்கவுள்ளது.

தொடர்ச்சி P2

சுகாதார தொழிற்சங்கங்கள்

# ஊவாவில் இன்றும் கிழக்கில் நாளையும் பணிப்புறக்கணிப்பு

ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இன்று (15) காலை 7 மணி முதல் 24 மணித்தியால கூட்டு பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நாளை வியாழக்கிழமை (16) 24 மணித்தியால வேலைநிறுத்தப் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளதாகவும் சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# முகமாலைக்கு நீதவான் விஜயம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளுடையது என நம்பப்படும் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள், ஆயுத தளபாடங்கள் ஆகியவற்றை, நேற்று (14), நீதவான் பார்வையிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்

# கைதான சம்பூர் இளைஞன் விடுதலை

■ அ . அச்சுதன், எப்.முபாரக்



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலகிருஸ்ணன் ரதிகரன் (வயது 28), பிணையில் செல்ல திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கராசா இளஞ்செழியன், நேற்று (14) அனுமதி வழங்கினார்.

இந்த வழக்கு நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினர்.

தொடர்ச்சி P2

சம்பிக்கவின் கடவுச்சீட்டு

# தற்காலிகமாக விடுவிப்பு



ராஜகிரிய விபத்து தொடர்பான வழக்கில் கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ள முன்னாள் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் வெளிநாட்டு பயணங்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று (14) தற்காலிக அனுமதி வழங்கியது.


கொழும்பு மேல் நீதிபதி தமித் தோட்டவத்த முன்னிலையில் மனுவொன்றை தாக்கல் செய்த சம்பிக்க ரணவக்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வெளிநாடு செல்ல எதிர்பார்ப்பதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சீன நிறுவனத்துக்கு

# 6.7 மில்லியன் டொலர் வழங்குகிறது அரசாங்கம்

**உரத்தை மீள உற்பத்தி செய்யுமாறும் கோரிக்கை**



சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய சீன உர நிறுவனத்துக்கு 6.7 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் தர நிலைகளுக்கு அமைய உரத்தை மீள உற்பத்தி செய்யுமாறு அந்நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளதாக விவசாய

தொடர்ச்சி P2

# இருவர் நியமனம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ இருவரை நியமித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்ஹ தலைவராகவும் களுபாத்த பியரத்ன தேரர் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# திருப்பி அனுப்பப்படுகிறது

தரமற்ற சமையல் எரிவாயுக்களை சந்தைக்கு விநியோகித்ததன் ஊடாக ஏற்பட்ட அனர்த்தங்களுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு அடுத்த வாரம் தொடரப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார். இது தொடர்பில் தமது அதிகார சபையால் முன்னெடுக்க கூடிய சகல செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# லிட்ரோவுக்கு அவகாசம்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ருவான் பெர்னாண்டோ மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
அதன்போது, திறக்கப்படாத எரிவாயு சிலிண்டர்களை திரும்பப் பெறுமாறும், எரிவாயு சிலிண்டரில் உள்ள எரிவாயுவின் கலவை என்ன என்றும், அந்தக் கலவையை காட்சிப்படுத்துவது தொடர்பில் உடன்பாடு எட்டப்படுமா என்றும் பிரதிவாதிகள் தரப்பிடம் நீதியரசர்கள் குழாம் கேட்டது.
அவ்வாறு உடன்பாடு ஏற்பட்டால், மனுதாரர் கோரிய தடை உத்தரவை பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் குழாம் சுட்டிக்காட்டியது.
இதன்போது, நுகர்வோர் அதிகாரசபை சார்பில் ஆஜரான சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பர்ஸானா ஜெமீல் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர ஆகியோர், திறக்கப்படாத உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்றுக்கு அறிவித்தனர்.
லாஃப்ஸ் ஹோல்டிங்ஸ் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுரேன் டி சில்வா, லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்களின் கலவையில் மாற்றம் செய்யப்படவில்லை என்றும், சிலிண்டர்களை திரும்பப் பெறுமாறு நுகர்வோர் அதிகார சபையால் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
லிட்ரோ நிறுவனம் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசூரிய, கலவையை காட்சிப்படுத்துவது தொடர்பில் தனது கட்சிக்காரருடன் கலந்தலோசிக்க அனுமதி வழங்குமாறு கோரியதையடுத்தே, மனுவை இன்று (15) விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

# அடுப்புகள் வெடித்தால் உடனடியாக அணுகவும்

அதற்காக எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் தயாராகவுள்ளது என்றார்.
எனவே, சமையல் எரிவாயு அடுப்புகள் வெடித்த சம்பவங்களுக்கு முகம்கொடுத்த அனைவரும் தமது தகவல்களை எமது கட்சியின் தலைமையகத்தில் பதிவு செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்.
தரமற்ற அரசாங்கத்தைக் கொண்டுள்ள நாட்டில் தரத்தை எதிர்பார்க்க முடியாதென்றும் எனவே, தரமற்ற ஆட்சியாளர்களை அகற்றுவதே தரமானவர்கள் செய்ய கூடிய ஒன்று என்றார்.
மோசமான, தரமற்ற உர இறக்குமதியால் இன்று நாடு பாரிய அழிவை நோக்கி சென்று கொண்டிருப்பதாகத் தெரிவித்த அவர், நாட்டின் பொருளாதாரத்தில் விவசாயிகளின் வாழ்க்கை ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என்றார்.
இந்த, காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவத்தால் நான்கு பிள்ளைகளின் தாயொருவரின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நுகர்வோர் விவகார அமைச்சர் மக்களை தவிர்த்து வருகின்றார். கேட்கும் கேள்விகளுக்கு அவரிடம் பதில் இல்லை.
எனவே இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் வழங்க கூடிய தீர்வு ஆணைக்குழுவை நியமிப்பதா?, பிரச்சினைகளில் இருந்து தப்பிச் செல்வதா? யார் இதற்கு பொறுப்பு கூறுவதென கேள்வி எழுப்பினார்.

# விடுமுறை கழிக்கும் நேரமல்ல

அமைச்சரவைக்கு அப்பால் யாரோ உள்ளனர்.
நாட்டை வழிநடத்தும் தலைவரிடம் அவரைச் சூழவுள்ள அதிகாரிகள் பல போலி விடயங்களை கூறுகின்றனரென நினைக்கிறேன். அதனால்
துயரங்களை பகிர்ந்துகொள்ளும் நேரமிது. அப்போதுதான் மக்களிடம் நம்பிக்கையை கட்டியெழுப்பலாம். அந்த நம்பிக்கையை கட்டியெழுப்பவதற்காக எமக்கிருக்கும் சந்தர்ப்பத்தை சிந்தனையுடன் பயன்படுத்த வேண்டும் என்றார்.
குறைந்தது இந்தச் சமையல் எரிவாயு பிரச்சினைக்கு கூட யார் பொறுப்பென தெரியவில்லை. வேறு நாட்டில் இவ்வாறு இடம்பெற்றிருந்தால் குறித்த நிறுவனங்களின் பிரதானிகள் கைதுசெய்யப்பட்டிருப்பர். ஆனால், எதுவும் தெரியாததைப் போன்று இருக்கின்றனர்.
இவ்வாறான நிலையானது நாட்டில் அராஜகத்துக்கான வழியை ஏற்படுத்தும் என தெரிவித்த அவர், இன்று நாட்டை வழிநடத்த பொருளாதாரம் தொடர்பான பிரச்சினை அனைவரும் ஒன்று கூடி கலந்துரையாட வேண்டிய விடயமாகும். உண்மைக்கு மதிப்பளித்து தீர்க்கப்பட வேண்டிய விடயமே தவிர, மறைமுகமாக தீர்க்க வேண்டிய விடயமல்ல என்றார்.
இந்த மாதம் நிறைவடைவதற்குள் அந்நிய செலாவணியை கொண்டு வருகிறோம் என, கூறுகின்றனர். ஆனால், அது ஒருபோதும் நடக்காதென அவர்களுக்கும் தெரியும் கேட்டுக்கொண்டிருக்கும் எமக்கும் தெரியும். முறையான பொறிமுறையொன்று இன்மையே அந்நிய செலாவணி எமக்கு கிடைக்காமைக்கான பிரதான காரணமாகும் என்றார்.

# மரண தண்டனை விதித்தலில் திருத்தம்

உறுப்புரையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஆனாலும், 18 வயதுக்குக் குறைவாக இருப்பின் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாதெனக் கூறும் ஏற்பாடுகள் குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தின் 281 ஆம் உறுப்புரையில் உட்சேர்க்கப்படவில்லை.
அதனால், நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மையை நீக்குவதற்காக குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது.
அதற்கமைய, குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தின் 281 ஆவது உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக நீதி அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# ஊவாவில் இன்றும் கிழக்கில் நாளையும் பணிப்புறக்கணிப்பு

பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தப் போராட்டத்தின் மற்றுமொரு கட்டமாக ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிலையங்களிலும் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.
மருத்துவ ஆய்வக வல்லுநர்கள், தாதியர்கள், சுகாதார வல்லுநர்கள் மற்றும் உதவி சுகாதார வல்லுநர்கள் ஆகியோர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.
சுகாதார நிபுணர்களின் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல், பட்டதாரிகளின் சம்பளம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ரணுக்கே குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், மருத்துவ நிர்வாகத்தில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களுக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தார்.
மூன்று மாதங்களாக விவாதித்து தீர்வு காணுமாறு கோரிக்கை விடுத்தும் பலனில்லை.
சுகாதார அமைச்சு, உரிய அமைச்சர் அல்லது சுகாதார அமைச்சின் செயலாளரிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நிபுணத்துவம் இல்லாமை தற்போது பிரச்சினையை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
தொழிற்சங்க நடவடிக்கையின் பின்னணியில் உள்ள காரணங்களையும், தொழிற்சங்க நடவடிக்கையால் பொதுமக்கள் சிரமப்படுவதைத் தடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்காதமை தொடர்பிலும் பொதுமக்களுக்கு அறிவிப்பதாகவும் கூறினார்.

# கைதான சம்பூர் இளைஞன் விடுதலை

மூதூர் - சம்பூர் 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த குறித்த இளைஞன், மாவீரர் தினத்தையொட்டி கவிதை ஒன்றினை தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றியமைக்காக 27.11.2020 அன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கைது செய்யப்பட்டு திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.
இவருக்கு எதிரான வழக்கு மூதூர் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில் இவருடைய விடுதலைக்காக பல்வேறு தரப்பினரும் முயற்சி செய்துவந்தனர்.
அந்தவகையில் சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய ரனித்தா மயூரன் குழுவினரால் சிரேஷ்ட சட்டத்தரணி ரத்தினவேல் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் பிணைக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்த நிலையிலேயே பிணை வழங்கப்பட்டுள்ளது.
பிரதிவாதி சார்பாக சட்டத்தரணி நா.மோகன் ஆஜராகியிருந்தார்.
அத்துடன், திருகோணமலையில் மட்டுமல்லாது பல மாவட்டங்களில் இருந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சட்டமா அதிபரின் பரிந்துரைகள் எங்கே?

அமைச்சரவையில் கூறியிருந்த போதிலும் பரிந்துரைகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்த ஒப்பந்தம் தொடர்பில் பல விடயங்களை முன்வைத்தார்.
இந்த நிறுவனம் முதலில் ஸ்ரீ லங்கா ஹோல்டிங்ஸ் என குறிப்பிடப்பட்டதாகவும் மத்திய வங்கியின் நாணயச் சபையின் கடிதத்தை பரிசீலிக்காமல் சட்டமா அதிபர் எவ்வாறு ஒப்பந்தத்தை அங்கிரித்தார் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.
நீதி அமைச்சு, இவ்விடயத்துக்கான கோப்பு ஒன்றைத் திறந்து, அந்தந்த ஒப்பந்தத்துக்கான எண்ணை வழங்கிய பின்னரே, சட்டமா அதிபர் ஓர் ஒப்பந்தத்தை அங்கிகரிக்க முடியும் என்று நினைவூட்டிய ஹந்துன்நெத்தி, இந்த விடயத்தைக் கையாள அமைச்சின் ஊழியர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றார்.
எவ்வாறாயினும், குறித்த ஒப்பந்தத்தில் சட்டமா அதிபரின் அனுமதியை நியாயப்படுத்தும் ஆவணங்கள் இல்லை என்றும் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாததால், இலங்கையில் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்றும் குறிப்பிட்டார்.
சட்டமா அதிபர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்பிய ஹந்துன்நெத்தி, இரண்டு வருடங்களுக்கு பொது மக்களுக்கு வெளிப்படுத்த முடியாத ஒரு சரத்து ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வலியுறுத்தினார்.
தாம் உள்ளடக்கியதாக கூறும் ஒப்பந்தத்தில் எவ்வாறு இவ்வாறானதொரு சரத்தை உள்ளடக்க முடியும் எனவும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார இல்லாவிட்டால் இந்த உடன்படிக்கை கவனிக்கப்படாமல் போயிருக்கும் எனவும் சுட்டிக்காட்டினார்.

# 6.7 மில்லியன் டொலர் வழங்குகிறது அரசாங்கம்

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
அத்துடன், நெருக்கடி காரணமாக இலங்கை கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்த சீன உரக் கப்பலை எடுத்துச் செல்ல சீன நிறுவனத்தால் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
அதன்படி, ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட செயற்றிறன் உத்தரவாதத்தை பத்திரமாக வைத்தும், கடன் கடிதத்தின் விதிமுறைகள் மற்றும் இரு தரப்பினரின் ஒப்பந்தத்தின்படியும் உரக் கப்பலை மீண்டும் தனது நிறுவனத்துக்கு எடுத்துச் செல்ல விவசாய அமைச்சகம் ஒப்புக்கொண்டது.
கொழும்பு வர்த்தக உர நிறுவனம் மற்றும் சீனாவின் குவின்டா ஓ பயோடெக் நிறுவனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதன உரங்கள் தொடர்பாக, இலங்கை உரக் கம்பனிக்கு இடையில் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்ட வர்த்தக விதிமுறைகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்டுள்ள வர்த்தக நெருக்கடியை தீர்த்து வைப்பதற்காக சட்டமா அதிபர் வழங்கிய பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
இதன்படி, நீதி அமைச்சு மற்றும் விவசாய அமைச்சினால் நேற்று முன்தினம் (13) சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு அமைச்சரவைப் பத்திரங்கள் மீது கவனம் செலுத்திய அமைச்சரவை, சட்டமா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக செயற்படுவதற்கு உரிய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கியது.

# தற்காலிகமாக விடுவிப்பு

விசா பெறும் நோக்கத்துக்காக தமது கட்சிக்காரரின் கடவுச்சீட்டை விடுவிக்க நீதிமன்றத்தின் அனுமதியை வழக்கறிஞர் கோரியதையடுத்தே, அவரின் கடவுச் சீட்டை தற்காலிகமாக விடுவிக்குமாறு, நீதிமன்றப் பதிவாளருக்கு கட்டளையிட்ட நீதிபதி, இது தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறும் கட்டளையிட்டார்.
2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க, அவரது சாரதி மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராக பொய்யான சாட்சியங்களை சோடனை செய்தமை, சதி செய்தமை மற்றும் பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷர்கள் நியமிக்கப்படலாம்

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, இவ்விரு குழுக்களின் தலைவர்களாக உள்ள பேராசிரியர்களான சரித்த ஹேரத், திஸ்ஸ விதாரண ஆகியோர் தற்போதைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் அவதானம் செலுத்திவருகின்றனர்.
இதனால் அதிருப்தியடைந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷர்கள் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கு தீர்மானித்தனர் என பொதுக்கள் கருதுவதாகவும் கூறினார்.
பாராளுமன்ற அமர்வுகளை திடீரென ஒத்திவைத்துவிட்டு என்ன நாடகம் ஆடுகிறார்கள் என்பது சிறு குழந்தைக்குக் கூட தெரியும். ஜனவரி 18ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது இவ்விரு குழுக்களின் தலைவர்களாக ராஜபக்ஷர்களின் குடும்ப உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றார்.

# நால்வருக்கு விளக்கமறியல்

இரண்டு வாள்வெட்டு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற தர்க்கம் வாள்வெட்டில் முடிவடைந்தது.
இந்த சம்பவத்தில், இளைஞன் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில், விசாரணைகளை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார், சந்தேக நபர்கள் நால்வரை கைதுசெய்தனர்.
மேலும், 11 சந்தேக நபர்களை தேடி வலை வீசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகமாலைக்கு நீதவான் விஜயம்

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது, சனிக்கிழமையன்று (11), தமிழீழ விடுதலைப் புலிகளுடையது என நம்பப்படும் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள், ஆயுத தளபாடங்கள் உட்பட்ட வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
குறித்த பொருள்கள் தொடர்பில், பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், பளை பொலிஸாரால் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் கவனத்துக்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்பட்டது.
இந்நிலையில், கிளிநொச்சி நீதவான், நேற்று (14) குறித்த பகுதிக்குச் சென்று, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள், ஆயுத தளபாடங்கள் என்பவற்றை பார்வையிட்டுள்ளார்.





## திருவுருவச் சிலை பிரதிஷ்டை

கொழும்பு, ஜிந்துபிட்டி வீதி, 61ஆம் இலக்க தோட்டத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ தர்மசாஸ்தா கோவிலிலல், வேப்ப மரத்தடி சொட்டனிகரை பகவதி அம்மனின் திருவிழா பூஜைகளுடன் ஆரம்பமானதுடன், சொட்டனிகரை அம்மனின் திருவுருவச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதம குருக்களான ஸ்ரீ சர்மா குருக்கள், கா. சுதாகர் சர்மா குருக்கள் ஆகியோரின் தலைமையில் பூஜைகள் நடைபெற்றன.

# பூஸ்டர் கட்டாயம்



உடலில் ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடையும் என்பதால், இரு தடுப்பூசிகளையும் செலுத்திக்கொண்டவர்கள் கட்டாயமாக பூஸ்டரையும் செலுத்திக்கொள்ள வேண்டும் என விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் தடுப்பூசிகளால் உடலில் உண்டாகும் நோய் எதிர்ப்பு சக்திகள் குறைவடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே மூன்றாது தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசிகளை செலுத்தி, உடலில் மிகச்சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே இரு தடுப்பூசிகளை பெற்றுகொண்டவர்கள் உரிய காலத்துக்குள் மூன்றாவது தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதனூடாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். மேலும், பூஸ்டர் செலுத்திக்கொண்டவர்களிடமிருந்து ஏனையயோருக்குக் கொரோனா வைரஸ் பரவுவதும் குறைவடையும் எனவும் கூறினார்.

தொழிற்சங்க நடவடிக்கை மக்களைப் பாதித்தால்

## இ.போ.சவுடன் ரயில்வே கைகோர்க்கும்

ரயில்வே தொழிற்சங்க நடவடிக்கையானது மக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தொழிற்சங்க நடவடிக்கை பிரச்சினைகளை ஏற்படுத்தினால், இலங்கை போக்குவரத்து சபையுடன் கைகோர்த்து ரயில்வே திணைக்களம் மாற்று வழிகளை மேற்கொள்ளும் எனவும் ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் தொழிற்சங்கங்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றால், தற்போதைய கொரேனா நிலைமை தொடர்பில் திணைக்களம் மாற்று வழிகளைத் தேட வேண்டியிருக்கும் என்றார்.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்திடம் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலுக்கு அழைப்புவிடுத்த போதிலும், அவர்கள் அதனை நிராகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொழிற்சங்கங்களுடன் பிரச்சினைகள் காணப்படுவதாகவும், பேச்சுவார்த்தை நடத்தி அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கருவூலத்திலிருந்து சம்பளம் பெறுபவர்கள், மக்கள் விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் தொழிற்சங்கக் கோரிக்கைகள் தொடர்பில் ரயில்வே திணைக்களமும் அரசாங்கமும் ஏற்கெனவே செயற்பட்டு வருவதாகவும், அவற்றை விரைவாகத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



## லொஜிஸ்டிக் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

'மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக' வளாகத்தின் முதலாவது களஞ்சிய வளாகமான ஹம்பாந்தோட்டை லொஜிஸ்டிக் சர்வதேச சேவை வழங்கல் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஆரம்பமானது.

ஒரு ஹெக்டேயர் பரப்பளவை கொண்ட இக்களஞ்சிய வளாகத்தின் நிர்மாணப் பணிகளை குறிக்கும் வகையில் பிரதமரால் நினைவு பலகை திறந்து வைக்கப்பட்டது.

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஜோன்சன் லியூவின் அழைப்பின் பேரில் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கான சீன தூதுவர் குய் ஷென்ஹொங் உள்ளிட்ட குழுவினருடன் துறைமுக வளாகத்தில் காண்காணிப்பு விஜயம்மொன்றை மேற்கொண்டார்.

## இணைந்து செயற்படும் சமிக்ஞையை காட்டுகின்றேன்



சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் கடற்றொழில்சார் செயற்பாடுகள் தொடர்பாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் மார்டின் ரி ஹீலி கலந்துரையாடியுள்ளார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (13) இச்சந்திப்பு நடைபெற்றுள்ளதோடு, தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் தொடர்பாக இதன்போது கேட்டறிந்த அமெரிக்க பதில் தூதுவர், தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக தமிழர் தரப்புகளிடம் ஒருமித்த கருத்து நிலவுவது முக்கியமென்ற கருத்தை முன்வைத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத - நியாயமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற தரப்புகளுடன் இணைந்து செயற்படுவதற்கான சமிக்ஞைகளைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருவதாகவும், ஆனால் ஏனைய சில தரப்புகள் சுயலாபங்களுக்காக மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய தோற்றுப்போன வழிமுறைகளையே தொடர்ந்தும் பேசுவதாக தெரிவித்தார்.

மேலும், காணாமல் போனோர் விவகாரத்திற்குப் பரிகாரம் காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அணுகுமுறைகள் தொடர்பாகவும் புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுகளை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆர்வம் வெளியிட்டுள்ள நிலையில், அதுதொடர்பில் தன்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்கத் தரப்பிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

## மூவரையும் நம்புகின்றேன்



யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அடுத்தவார அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாட உள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் காமினி லொக்குகே, அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் அமைச்சர்களான உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோர் ஒரு நிலைப்பாட்டுக்கு வருவார்கள் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்பட உள்ளது. குறிப்பாக அடுத்த வார அமைச்சரவை சந்திப்பின்போது இது குறித்து விரிவாக கலந்துரையாடப்படும்.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோர் இது தொடர்பில் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் அமைச்சரவையில் இது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்படுவதன் ஊடாக ஒரு நிலைப்பாட்டுக்கு வர முடியும் எனத் தான் நம்புவதாகவும் கூறினார்.

## இ.மி.சவின் 12 தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்



இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப மற்றும் பொறியியல்துறை சார்ந்த 12 தொழிற்சங்கங்கள் இணைந்து, கொழும்பு- 2இல் உள்ள இலங்கை மின்சார சபையின் தலைமைக் காரியாலயத்துக்கு முன்பாக அமைதியான ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (14) நடத்தின.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்களிடம் இருந்து உச்ச பயனைப் பெறுதல், என்.வி.கியூ தரச்சான்றிதழ் உள்ள அமைய ஊழியர்களை நிரந்தரமாக்குதல், 70 சதவீதமான பலசக்தித் திட்டத்தை இலங்கையில் அமல்படுத்துதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேலும், அரசியல் ரீதியாக தொழிலாளர்களின் தற்காலிகமாக அரச நியமனங்களை நிறுத்துங்கள், சேவையாளர்களை அடிக்கடி இடமாற்றும் திட்டத்தை நிறுத்துங்கள், ஊழியர்களது அடிப்படைக் கொடுப்பனவுகள், பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவற்றை ஒரு சிறந்த முறையான திட்டத்தின் ஊடாக அமல்படுத்துங்கள், இலங்கை மின்சார சபையின் சொத்துகள், திட்டங்களை இரகசியமாக வெளிநாடுகளுக்கு கையளிக்கும் ஒப்பந்தங்களை உடன் நிறுத்துங்கள் போன்ற 13 க்கும் மேற்பட்ட கோரிக்கைளை முன்வைத்தே ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டனர்.

## உரிய நேரத்தில் தீர்மானிக்கும்



சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினராக இலங்கை இருப்பதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, எனவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்றுக்கொள்வது தொடர்பில், உரிய நேரத்தில் அரசாங்கம் தீர்மானிக்கும் என்றார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், எனக்கு நிதிப் பிரச்சினை ஏற்படும்போது, கடனைப் பெற்றுக்கொள்ள வங்கிக்கு செல்வேன். சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினராக இலங்கை இருக்கிறது. எனவே இது தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நாடு வங்குரோத்தடையும் என எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளையும் மறுத்த இராஜாங்க அமைச்சர், எதிர்காலத்தில் நாடு வங்குரோத்து நிலைமைக்குச் செல்லாது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறுகிறார். எனவே அதனை தடுப்பதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் முறையொன்றை வைத்திருப்பார் எனவும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின்

## நிபந்தனைகளுக்கு அடிபணிய முடியாது



சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் கடுமையான நிபந்தனைகளுக்கு அடிபணிந்து கடனைப் பெற்றுக்கொள்ள முடியாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டை ஆட்சி செய்த ஒவ்வோர் அரசாங்கமும் வெளிநாடுகளில் இருந்து கடனைப் பெற்றுகொண்டுள்ளன. இதுவழமையான ஒன்று. பலவந்தமாக எவரிடமிருந்தும் கடனைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை கிடையாது.

அரசாங்கம் இணங்கக்கூடிய நிபந்தனைகளை ஏற்றுகொண்டு, கடன்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது. எனினும், சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் கடுமையான நிபந்தனைகளுக்கு அடிப்பணிந்து கடனைப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

## இலங்கை முதலீட்டு சபைக்கு புதிய தலைவர்

இலங்கை முதலீட்டு சபையின் புதிய தலைவராக சிவில் பொறியியலாளரும் இராஜதந்திரியுமன ராஜா எதிரிசூரிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ராஜா எதிரிசூரிய, மிஹின் லங்காவின் பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், சிலி, ஆர்ஜென்டினா உட்பட பல நாடுகளுக்கான உயர்ஸ்தானிகராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் சஞ்சய மொஹொத்தல இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ராஜா எதிரிசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாவனைக்கு உதவாத பெருந்தொகை சீனி சிக்கியது

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான களஞ்சியசாலை ஒன்றிலிருந்து 10 ஆயிரம் கிலோ கிராமுக்கு அதிகமான பாவனைக்கு உதவாத சீனியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து இந்தப் பெருந்தொகை சீனி இறக்குமதி செய்யப்பட்டிருந்த நிலையில், ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறி, இதனை விற்பனை செய்வதற்குத் தயாரான நிலையில் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான களஞ்சியசாலையில் இந்த மோசடி இடம்பெற்று வருவதாகத் தம்புள்ளை நகர சபைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இதன்படி தம்புள்ளை மேயர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

விரைந்து செயற்பட்ட பொலிஸார் களஞ்சியசாலைக்கு சென்று சோதனையிட்டபோது பெருந்தொகையான சீனியை மீட்டுள்ளதோடு, மக்கள் பாவனைக்கு உதவாத ஏனைய உணவுப் பொருள்களையும் பொலிஸார் அங்கிருந்து மீட்டுள்ளனர்.

**பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

கம்பனியின் பழைய பெயர் : அமரேசியன் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

கம்பனி இல : பீவீ 60318

பதிவு செய்யப்பட்ட முகவரி : இல: 107, உள் மலர் வீதி, கொழும்பு 03.

கம்பனியின் புதிய பெயர் : அக்வா இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

கம்பனி செயலாளர்கள்

எல். எம். மெனேஜ்மன்ட் சேவிசஸ் (பிறைவட்) லிமிடட்

இல: 291/32 A, ஹெவ்லொக் பூங்கா, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.

துன்னாலையில்

# அடுப்பு வெடித்தது

## பெண் காயம்

■ எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், துன்னாலை பகுதியில், நேற்று (14) காலை 5.30 மணியளவில், எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியதில், பெண் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றும் அ. பௌநந்தி என்பவரின் வீட்டிலேயே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழமை போன்று, நேற்றைய தினம் காலையில், விரிவுரையாளரின் மனைவி உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்த போது, எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது.

இதன்போது, வெடித்துச் சிதறிய அடுப்பின் பாகம் ஒன்று விரிவுரையாளரின் மனைவியின் தலையில் பட்டதில் அவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இதேவேளை, அடுப்பு வெடித்துச் சிதறிய அதிர்வில், சமயலறையின் சீலிங் சீட்டும் (கூரை தகடும்) வெடித்துள்ளது.

எரிவாயு சிலிண்டரை, நேற்று முன்தினமே (13), மாற்றி இருந்ததாக விரிவுரையாளர் தெரிவித்துள்ளார்.







சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் கடலரிப்பு;

# கடற்றொழில் பாதிப்பு

## மீனவர்கள் நிர்க்கதி

■ அஸ்லம் எஸ்.மௌலானா

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களான சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பு காரணமாக, இயற்கை மற்றும் கடற்றொழில் வளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வட கீழ் பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள நிலையில், கடந்த சில தினங்களாக அம்பாறை மாவட்ட கடல் பரப்பில் ஏற்பட்டுள்ள கடற்கொந்தளிப்புக் காரணமாக சாய்ந்தமருது முகத்துவாரம் தொடக்கம் மாளிகைக்காடு மையவாடி வரையிலான பகுதியில் இவ்வாறு பாரிய கடலரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதனால் நேற்றைய தினம் (14) சில வாடிகளும் வலைகளும் உபகரணங்களும் கடல் அலைகளால் காவு கொள்ளப்பட்டுள்ளதுடன், பல தென்னை மரங்களும் கடலுக்கு இரையாகியுள்ளன. அத்துடன் வீதியொன்றும் முற்றாகச் சேதமடைந்துள்ளது. சாய்ந்தமருது சிறுவர் பூங்கா, மீனவர் நூலகம் என்பனவும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

இந்த நிலைமையால் இப்பகுதியில் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியடைந்துள்ளனர்.

கடந்த வருடம் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக மாளிகைக்காடு மையவாடி சுவர்கள் இடிந்து வீழ்ந்து, அடக்கம் செய்யப்பட்டிருந்த ஜனாஸாக்களின் உடற்பாகங்களும் வெளிவருகின்ற நிலைமை ஏற்பட்டதையடுத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில், சுமார் 14 மில்லியன் ரூபாய் செலவில் கரையோரம் பேணல் திணைக்களத்தால் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விபத்தில்

# குடும்பஸ்தர்கள் இருவர் படுகாயம்



■ செந்தூரன் பிரதீபன்

அச்சுவேலி - செல்வச்சந்நிதி பிரதான வீதியில், நேற்று முன்தினம் (13) இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், இரு குடும்பஸ்தர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலியில் இருந்து தம்பாளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், கதிரிப்பாய் பகுதியிலிருந்து அச்சுவேலி நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், பத்தமேனி சந்தியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளன.

இந்தச் சம்பவத்தில், இரு மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி, ஆபத்தான நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், அச்சுவேலி, தோப்பு பகுதியைச் சேர்ந்த ஆனந்தராசா சயந்தன் (வயது 30), தம்பாலை, அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த எஸ். கஜன் (வயது 42) ஆகியோரே, காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை, அச்சுவேலி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# திருவிழா....

■ எம்.றொசாந்த்

புராண கதைகளில் பிரமனின் தலையை சிவபெருமான் கிள்ளும் கதையை சித்திரிக்கும் திருவிழா, நல்லூர் சிவன் கோவிலில், நேற்று முன்தினம் (13) நடைபெற்றது.

நல்லூர் சிவன் கோவில் மகோற்சவம் நடைபெற்று வருகிற நிலையில், குறித்த திருவிழா நடைபெற்றது.

படைக்கும் கடவுளான பிரமனுக்கு முன்னதாக ஐந்து தலைகள் இருந்ததாகவும் அதனால், பிரமன் ஆணவத்துடன் காணப்பட்டதால், சிவ பெருமான் பிரமனின் ஆணவத்தை நீக்கும் முகமாக, அவரின் ஒரு தலையைக் கிள்ளியதாகவும் 'பரமனை மதித்திடா பங்கையாசனன் ஒரு தலை கிள்ளியே' என புராண கதைகளில் கூறப்பட்டுள்ளது.

அக்கதையை சித்திரிக்கும் வகையிலையே, குறித்த திருவிழா நடைபெற்றது.

# பீற்றர் இளஞ்செழியன் மீது தாக்குதல்

■ சண்முகம் தவசீலன்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களில் ஒருவருமான பீற்றர் இளஞ்செழியன், தாக்குதலுக்கு உள்ளாகி, படுகாயம் அடைந்துள்ளார்.



முல்லைத்தீவு, மணற்குடியிருப்பு பகுதியில், சனிக்கிழமை (11) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பீற்றர் இளஞ்செழியனின் வீட்டுக்கு அருகில் உள்ள அவரது சகோதரனின் காணிக்குள், இரு பெண்களும் ஒரு ஆணும் மாடு ஒன்றை பிடித்து வந்து கட்டியுள்ளனர். அந்த மாட்டை அங்கிருந்து அகற்றுமாறு பீற்றர் இளஞ்செழியன் கோரியபோது, அங்கிருந்த பெண் ஒருவர், தனது மகளின் கணவரை வரவழைத்து, அவர் மீது தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், இதுவரை எவரும் கைது செயயப்படவில்லை.

புதுக்குடியிருப்பு மக்களுக்கு

# நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அறிவித்தல்

■ மு.தமிழ்ச்செல்வன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு பிரதேசத்தில், குழாய் வழி குடிநீர் இணைப்பைப் பெற்றுக்கொண்ட மக்களுக்கு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அதாவது, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால், குழாய் வழி வழங்கப்படுகின்ற நீர் இணைப்பைப் பெற்றுக்கொண்ட மக்கள், நீர் இணைப்பை பெற்றும் இதுவரை மாதாந்த கட்டணப் பட்டியல் கிடைக்கப்பெறாதவர்கள், நீர்மானியைப் பொருத்தியும் நீரை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், நீர்மானியில் பிரச்சினைகள் உள்ளவர்கள், புதுகுடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அலுவலகத்திலோ அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொறியியலாளர் அலுவலக தொலைபேசி இலக்கமான 021-2283981 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு, தங்களது பிரச்சினைகளை நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

# மாற்றுவலு உடையவர்களுக்கான தொழிற்சந்தை

■ சண்முகம் தவசீலன்




முல்லைத்தீவு மாவட்ட செயலக மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களப் பிரிவினரால், மாற்றுவலுவுடையவர்களுக்கு தொழில்வாய்ப்புகளை தனியார் நிறுவனங்களில் பெற்றுக்கொடுப்பதற்கான தொழிற்சந்தை, இன்று (15) காலை 9 மணிக்கு, முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த தொழிற்சந்தையில் பங்குபற்றவிரும்புபவர்கள், மாவட்ட செயலக மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்கள பிரிவின் இணைப்பாளர் ஜெ.துஷிராஜை, 077-3482423 எனும் அலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

கிழக்கிலும்

# அஞ்சல் பணி முடக்கம்



■ ஹஸ்பர் ஏ ஹலீம், எம்.எஸ்.எம். நூர்தீன்

அஞ்சல் திணைக்களத்தின் அனைத்துத் தொழிற்சங்கங்களும், 32 மணி நேர அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர், சாந்த குமார மீகம இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

இதனால் திருகோணமலை, அப்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் உப தபாலகங்களும் நேற்று (14) மூடியிருந்தன.

மட்டக்களப்பு பிரதம தபால் நிலையம் உட்பட மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள தபால் அலுவலகங்கள் உப தபால் அலுவலகங்களின் சேவைகள் செயலிழந்து காணப்பட்டன.

திருகோணமலை, தம்பலகாமம் பகுதியிலுள்ள உபதபாலகம், கல்மெடியாவ உப தபாலகம் உள்ளிட்ட அனைத்து தபாலகங்களும் மூடப்பட்டு, வெறிச்சோடிக் காணப்பட்டன. தபாலகங்களுக்குச் சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

தபால் சேவையுடன் தொடர்புடைய தங்களது பிரச்சினைகள் உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

திங்கட்கிழமை 13ஆம் திகதி மாலை 4 மணி முதல், நேற்று (14) நள்ளிரவு வரை இந்த அடையாள பணிப் புறக்கணிப்புத் தொடர்ந்தது.



# மூன்று நாள்களில் 1,600 பேருக்கு பூஸ்டர்

■ வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, கடந்த மூன்று நாள்களில் கொட்டும் மழைக்கு மத்தியில் 1,600 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தி சாதனை படைத்துள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் நேரு நிலையத்திலும் நேற்று (14) தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

குறைந்த ஆளணி ஊழியர்களுடன் நிறைவான சேவையை செய்துவரும் காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையிலான குழுவினர் பொதுமக்களால் பாராட்டப்பட்டனர்.

காரைதீவு சுகாதார பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சனிக்கிழமை (11) முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. முதல்நாளில் 600 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி 3 இடங்களில் வழங்கப்பட்டதாக காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

காரைதீவு சுகாதார வைத்தியஅதிகாரி அலுவலகம், விபுலாநந்தா, சண்முகா ஆகிய இருபாடசாலைகளிலும் சனிக்கிழமை விசேட தடுப்பூசி நிலையங்களை நிறுவி, அதனூடாக இந்த 3ஆம் தடுப்பூசி வழங்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபையின்

# பட்ஜெட் வெற்றி

■ பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்

அம்பாறை, காரைதீவு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மேலதிக இரு வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் பட்ஜெட், தவிசாளர் கி.ஜெயசிறிலினால் நேற்று முன்தினம் (13) 46ஆவது சபை அமர்வில் முன்வைக்கப்பட்டது.

உறுப்பினர்களான எம்.எச்.எம்.இஸ்மாயில், ச.நேசராஜா, த.மோகனதாஸ், சி.ஜெயராணி, ச.சசிகுமார், என்.எம்.றனீஸ் ஆகியோர் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

உப தவிசாளர் ஏ.எம். ஜாஹீர், ஏனைய உறுப்பினர்களான ஏ.ஆர். எம்.பஸ்மீர், எம்.ஜலீல், கே.குமாரசிறி, கே. ஜெயதாசன் ஆகியோர் எதிராக வாக்களித்தனர்.

இதனடிப்படையில், காரைதீவு பிரதேச சபை மீண்டும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இரு உறுப்பினர்கள் மற்றும் சுயேட்சை குழு உறுப்பினரின் ஆதரவுடன் வரவு - செலவுத் திட்டத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இதன்போது, கருத்துத் தெரிவித்த தவிசாளர், காரைதீவு பிரதேச சபையின் பட்ஜெட் வெற்றியானது தமிழ் மற்றும் முஸ்லிம்களின் வெற்றி என்றார்.

12 உறுப்பினர்களை கொண்ட இச்சபையில் 7 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 5 உறுப்பினர்கள் எதிராகவும் வரவு - செலவு திட்டத்துக்கு வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சமையல் எரிவாயு அடுப்பு வெடித்தது



திருகோணமலை, 3ம் கட்டை, புளியங்குளம் பிரதேசத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று (14) மதியம் சமைக்கும் போது, எரிவாயு அடுப்பு சிதறித் தீப்பற்றியது

இதனால் சமையலில் ஈடுபட்டிருந்த குறித்த வீட்டின் பெண், வெளியில் ஓடி வந்து அயலவரில் துணையுடன் அடுப்பையும் கேஸ் சிலிண்டரையும் வீட்டிலிருந்து வெளியே எடுத்து தீயை அணைத்துள்ளார்.

அது தொடர்பில் திருகோணமலை தீயணைக்கும் பிரிவுக்கு அறிவித்ததையடுத்து, அவர்கள் ஸ்தலத்துக்கு விரைந்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கேபிள் கார் திட்டத்துக்கு

# அனுமதி கோரவில்லை



## நுவரெலியா பிரதேச சபை குற்றச்சாட்டு

■ ஆ.ரமேஸ்

நானுஓயா நகரத்திலிருந்து நுவரெலியா வரை நான்கு கிலோ மீற்றர் தூரம் முன்னெடுக்கப்படவுள்ள கேபிள் கார் அபிவிருத்தி திட்டத்துக்கு நுவரெலியா பிரதேச சபையிடம் அனுமதி கோரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென நுவரெலியா பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று, இத்திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

சபையின் அமர்வு நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற போது, இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்திட்டம், நுவரெலியா பிரதேச சபைக்குரிய இடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட உள்ளதால் அதற்கான அனுமதியைத் தமது பிரதேச சபையிடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அனுமதியைப் பெறாது இத்திட்டத்தை எந்த வகையில் ஆரம்பிக்க இவ்வொப்பந்தம் வெளிநாட்டுடன் அரசாங்கம் செய்து கொண்டுள்ளதென உறுப்பினர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

தோட்ட மருத்துவ உதவியாளர்களின்

# மரணச் சான்றிதழ்கள் சர்ச்சையாகின



■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

பெருந்தோட்டங்களில் இடம்பெறும் திடீர் மரணங்கள், கொரோனா தொற்றால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு குறித்த தோட்டங்களில் பணிபுரியும் தோட்ட மருத்துவ உதவியாளர்கள் மரணச் சான்றிதழை வழங்குகின்றமை தொடர்பில், விசாரணைகளை முன்னெடுக்குமாறு, பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள், அரச வைத்தியர்கள், திடீர் மரண விசாரணை அதிகாரிகள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், டிக்கோயா வைத்தியசாலையின் விசேட நீதிமன்ற வைத்தியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் பசீர் மொஹமட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், பசீர் மொஹமட், நேற்று (14) விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளதுடன், பெருந்தோட்ட வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியர்கள், பதிவு செய்யப்பட்ட அரச வைத்தியர்களாக இருக்க வேண்டும். ஆனால், பெருந்தோட்டங்களில் வைத்தியர்களாகக் கடமையாற்றுபவர்கள் மருந்தகங்களில் பல காலங்களாக பணிபுரிந்தவர்களாகவே உள்ளனர்.

எனவே, பெருந்தோட்டங்களில் எவராவது திடீரென உயிரிழந்தால், அல்லது தொற்று ஏற்பட்டு உயிரிழந்தால், அது தொடர்பான மரணச் சான்றிதழை விநியோகிக்கும் அதிகாரம், அருகிலுள்ள மாவட்ட வைத்தியசாலைகளின் வைத்தியர்களுக்கு மாத்திரமே உண்டு.

எனினும், சில பெருந்தோட்டங்களில், திடீர் உயிரிழப்பு அல்லது, கொரோனா மரணம் சம்பவிக்கும்போது, பிரேத பரிசோதனைக்கு அனுப்பாமல், மரண சான்றிதழ்களை விநியோகித்துள்ளமை சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு விநியோகிக்கப்பட்ட மரண சான்றிதழை அடிப்படையாக கொண்டு, பெருந்தோட்டங்களில் கொரோனாவால் உயிரிழந்த பலரது சடலங்கள், தகனம் செய்யப்படாமல் புதைக்கப்பட்டு உள்ளன என, திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் பசீர் மொஹமட் தெரிவித்துள்ளார்.

மண்மேடு சரிந்து விழுந்ததால்

# வீடு முற்றாகச் சேதம்

■ எம். செல்வராஜா

பசறை- 13ஆவது மைல்கல் பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்தமையால், அந்த வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது.

எனினும், இச்சந்தர்ப்பத்தில் குறித்த வீட்டில் எவரும் இருக்கவில்லை. இதனால், பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.



# உடற்பயிற்சி கூடம் திறந்து வைப்பு



■ டி.சந்ரு

நுவரெலியா நகர வாசிகள் நலன்கருதி, கிரகறி வாவிக்கு அருகில், நவீன வசதிகளுடன் திறந்த உடற்பயிற்சி கூடமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மேயர் சந்தனலால் கருணாரட்ன தலைமையில், நேற்று முன்தினம் (13) திறந்து வைக்கப்பட்ட இந்த உடற்பயிற்சி கூடத்தில் பொது மக்கள் முற்றிலும் இலவசமாக உடற்பயிற்சியில் ஈடுபட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.



சப்ரகமுவ மாகாண கைத்தொழில் திணைக்களத்தின்

# உள்நாட்டு கைத்தறி கண்காட்சி

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் மூலம் வருடாந்தம் நடத்தப்படும் கைத்தறி கண்காட்சி, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நேற்றுமுன்தினம் (13) சப்ரகமுவ மாகாண கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படி கண்காட்சியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ள மாகாண மட்டத்திலான கைத்தறி கண்காட்சி போட்டியில் பங்குபற்ற உள்ளனர்.

# தபால் சேவைகள் ஸ்தம்பிதம்









தபால் ஊழியர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் காரணமாக, நாட்டின் பல பாகங்களிலும் தபால் சேவைகள், நேற்று (14) ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இதற்கமைய, ஹட்டன், பதுளை, அக்குறணை உள்ளிட்ட பல நகரங்களில் உள்ள தபால் நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. (மலையக நிருபர்கள்)

மொனராகலையில்

# ஐந்து குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டன

■ சுமணசிறி குணதிலக



மொனராகலை மாவட்டத்தில் பெய்து வரும் அதிக மழையுடனான வானிலையால், மொனராகலை நீர்ப்பாசன வலயத்துக்குட்பட்ட பிரதான 5 குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என, மொனராகலை நீர்ப்பாசன பொறியியலாளர் இந்திரஜித் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட எத்திமலை குளம், கொட்டியாகல, சுகலாதேவி ஆகிய குளங்கள், புத்தள பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒக்கம்பிட்டிய சத்தாதிஸ்ஸ வாவி, யுதஹனாவ வாவி என்பவற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. குறித்த 5 பிரதான குளங்களின் கீழ், இம்முறை 5,000 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொத்மலை பிரதேச சபையூடாக

# இலவச மருத்துவ முகாம்

■ நிலமேகம் பிரசாந்த்

கொத்மலை பிரதேச சபையூடாக இலவச மருத்துவ முகாம், இன்று (15) புதன்கிழமை கொத்மலை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில், 35 வயதுக்கு உட்பட்டோருக்கான கண்பார்வைக் குறைபாடு,காது கேற்கும் திறன் குறைந்தோர், கை கால் ஊனமுற்றோர் உட்பட விசேட தேவையுடையவர்களை பரிசோதனை செய்து, அவர்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லிந்துலையில் 300க்கும் மேற்பட்ட



# தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

■ துவாரகஷன்

லிந்துலை, மட்டுக்கலை தோட்டத்தைச் சேர்ந்த சின்ன, பெரிய மட்டுக்கலைகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (14) பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து, மட்டுக்கலை தொழிற்சாலைக்கு முன்பாக பதாதைகளை ஏந்திவாறு, கறுப்புக் கொடிகளைப் பிடித்து, கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகத்தால் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திப்பதாகத் தெரிவித்து, இந்தப் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர்.

காலை 8 மணி முதல் பகல் 11 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கூட்டொப்பந்தம் இல்லாத காரணத்தால், பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கூட்டொப்பந்தம் மீண்டும் வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அத்துடன், தமக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் இதுவரை முறையாக் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டதுடன் தோட்டங்களை நடத்த முடியாவிட்டால் தமக்கு வழங்குமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பினர்.

இரசாயன உர இறக்குமதிக்கு வழங்கப்பட்ட அனுமதியை

# பரிசீலிக்க வேண்டும்

■ பி.கேதீஸ்

இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி இறக்குமதியை தனியார் நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்கிய அனுமதியை மீள் பரிசீலணை செய்ய வேண்டும் என, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.



இன்று அரிசி விலையையும் கோதுமை மாவின் விலையையும் பால்மாவின் விலையையும் நிர்ணயிப்பது அரிசி, கோதுமை மா, பால் மா விற்பனையாளர்களாகவே உள்ளனர். அதேபோல, இரசாயன உரம், கிருமிநாசினி ஆகியவற்றின் விலையை நிர்ணயிப்பதும் அவற்றை இறக்குதி செய்யும் வர்த்தகர்களாகவே உள்ளனர். இதனால் பாதிக்கப்படுவது விவசாயிகளே என்றார்.

கடந்த காலங்களில் வெளிநாடுகளிலிருந்து இரசாயன உரம், கிருமிநாசினி என்பவற்றை அரசாங்கம் நேரடியாக இறக்குமதி செய்து, மானிய விலையில் 13,00 ரூபாய்க்கு 50 கிலோ கிராம் நிறை கொண்ட ஒரு மூட்டையை விவசாயிகளுக்கு வழங்கியது.

ஆனால், தற்பொழுது அரசாங்கம் தனியாருக்கு இரசாயன உரம், கிருமிநாசினி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியதால் அவர்களே இவற்றின் விலைகளைத் தீர்மானிக்கிறார்கள். இதனால் விவசாயிகள் அதிக விலை கொடுத்து விவசாய உரம், மருந்துகளை வாங்க வேண்டிவரும் என்றார்.

# சிக்கனமாக வாழப் பழகிக்கொள்வது எதிர்காலத்தைப் பாதுகாக்கும்

உலையை அடுப்பில் வைத்துவிட்டு, சுண்டில் அரிசியை எடுக்கும் வீட்டுத்தலைவி, அதில் ஒரு கைப்பிடியை எடுத்து, பிறிதொரு பாத்திரத்தில் போட்டு வைப்பாள் என, முன்னோர்கள் இப்போதும் சொல்லிக்காட்டி, சிக்கனத்தை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என வழிகாட்டுவர். அரிசியை மட்டுமன்றி தானியங்களிலும் இவ்வாறே சேமிப்பர்.

மாதத்தின் இறுதியில் ஏற்படும் தட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதற்கும், உணவுகள் வீணாகிப்போவதை கட்டுப்படுத்தவும், அடுத்த சம்பளம் வரையிலும், முழுமாதமும் நிறைவாக உண்ணவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலும், ஒவ்வொரு வேளைகளிலும் சிறுகச் சிறுக சேமிப்பர்.

எகிறி நிற்கும் விலைவாசி, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு உள்ளிட்டவற்றால், எவற்றைக் கொள்வனவு செய்வது, எப்படிச் சமைப்பது என்பது தொடர்பில், சமைத்துப் பழகிய, குடும்பத் தலைவிகளே குமுறிக்கொண்டிருக்கின்றனர்.

வீட்டுத்தோட்டத்தில் கிடைக்கும் ஏதாவது காய்கறிகளை வைத்து, சமைத்துச் சாப்பிடுவோமென நினைத்தாலும், கடும்மழை, கடும்வெயில் போன்றவற்றால் வீட்டுத்தோட்டங்கள் பலவும் அழிந்துவிட்டன. அடுத்த வீட்டின் கதவைத் தட்டுவதற்குக் கூட, பலரும் வெட்கமடைந்து நிற்கின்றனர். 'நம்ப வீட்டிலேயே இல்லை; அந்த வீட்டில் எப்படி இருக்கும்' என நினைத்துக் கொள்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இதற்கிடையில், நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, அதிரடியான சில அறிவிப்புகளை விடுத்துவருகின்றார். இறக்குமதியைத் தொடர்ந்தும் கட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எரிபொருள், மருந்து, அத்தியாவசிய உணவுப் பொருட்கள், தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருட்களை இறக்குமதிச் செய்ய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், ஆளும் கட்சியின் எம்.பியான விஜயதாஸ ராஜபக்‌ஷ, இன்னும் இரண்டு மாதங்களில் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு, பஞ்சம் ஏற்படுமென எச்சரித்துள்ளார். இதனையே, எதிரணியைச் சேர்ந்த எவராவது கூறியிருப்பார்களாயின், அரசியல் இலாப நோக்கத்துடன் சொல்கிறார் என, ஆளும் கட்சியினர் கொக்கரித்துக் கூப்பாடு போட்டிருப்பர். ஆனால், ஆளும் கட்சியிலிருக்கும் ஒருவரே கூறியிருப்பதால், எதிர்விமர்சனங்கள் குறைந்துள்ளன.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2022 ஜனவரி மாதத்தின் இறுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்குத் தட்டுப்பாடு ஏற்படும். இதனால், நாட்டுக்குள் பாரிய பொருளாதார நெருக்கடியும் உணவுத்தட்டுப்பாடும் ஏற்படும் என ஆரூடம் கூறியிருந்தார். ஆக, அத்தியாவசியப் பொருட்களை நீண்ட காலத்துக்குச் சேமித்து வைத்திருக்க முடியாது. ஆனால், வீணாக்காமல் இருக்கலாம்.

ஒவ்வொருவரின் மனங்களிலும், இவ்வாறான சிக்கன சிந்தனை உதிக்க வேண்டும். பொருட்களின் விலைகள், அதிகரிக்கப்பட்டதன் பின்னர், அவற்றின் தராதரம் குறைந்துவிட்டதை காஸ் மூலமாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன், நிறைகளும் குறைந்துள்ளன. 450 கிராம் நிறையைக் கொண்டிருக்க வேண்டிய பாண், 290 கிராமில் விற்பனை செய்யப்படுகின்றது. அதுவும், பார்க்கும் போது, 450 கிராமைப் போல கண்களுக்குத் தென்படும் வகையில் உப்பிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் சிக்கனமல்ல; ஏமாற்று நடவடிக்கையாகும். ஆகையால், எதிர்வுகூறலைக் கவனத்திலெடுத்து சிக்கனமாக வாழப்பழகிக்கொள்வதே உசிதமானதாகும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

இயற்கை, மனிதர்களை ஏமாற்றி விடுவதுமுண்டு. மனித எண்ணங்களுக்கு ஏற்ப இயற்கை இயங்கமுடியாது.

உண்மையைச் சொல்லப்போனால், உலக சமநிலையையும் சுற்றாடலையும் குலைத்த குற்றம், மனிதர்களைச் சார்ந்ததாகும்.

காலம் செல்லச் செல்ல, உலகம் மெல்ல மெல்ல சிதைந்த வண்ணமாக உள்ளது. இந்தச் சிதைவுகளைச் சீர்படுத்த, ஒருவராலோ இலட்சக்கணக்கானவர்களாலோ முடியாது. முழு உலக மக்களும் இணைவது அவசியமாகும்.

தங்கள் பலத்தைக் காட்ட இது நேரமும் இல்லை. ஆணவம் மிகையானால், அறிவு மட்டமாகி விடுகின்றது. புத்தி கலங்கினால், சித்தம் எப்படித் துலங்கும்?

பிரளயம் ஒன்று வந்தால், யாரைப் போய்த் திட்டப்போகின்றார்கள்? குற்றங்களைத் தட்டிக்கேட்க, யார்தான் இயங்கப்போகின்றார்கள்?

மாய உணர்வுகளையும் வரட்டுக் கௌரவங்களையும் ஒழிக்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் உலகுக்கு உரித்தான பங்காளி ஆகின்றான். எனவே, இயற்கையைக் காப்பாற்றுதல் அவசியமானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தொட்டதெல்லாம் தோல்வியுறச் செய்யும் 20 ஆவது திருத்தம்



எம்.எஸ்.எம். ஐயூப்

தொட்டதெல்லாம் தோல்வியடையும் ஒரு நிலைமையையே அரசாங்கம் எதிர்நோக்கி இருக்கிறது.

பசளைப் பிரச்சினை, சமையல் எரிவாயு பிரச்சினை, விலைவாசிப் பிரச்சினை, வெளிநாட்டு முதலீடுகளைத் தேடும் பிரச்சினை, மனித உரிமைகள் பிரச்சினை என எத்தனையோ பிரச்சினைகள் விடயத்தில், அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டு செலாவணி இல்லாமையால், அரசாங்கம் இரசாயனப் பசளை இறக்குமதி செய்வதைத் தடைசெய்தது. இப்போது விவசாய உற்பத்திகள் வெகுவாகக் குறைந்து, நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படுமோ என்றதொரு நிலைமை உருவாகி இருக்கிறது.

அதேவேளை, சேதனப் பசளை எனக்கூறி விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பசளையை விவசாயிகள் நிராகரிக்கிறார்கள். பல பகுதிகளுக்கு வழங்கப்பட்ட சேதனப் பசளையில், கல்லும் மண்ணும் கலக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள். சில இடங்களில், திரவ சேதனப் பசளை எனக் கூறி வழங்கப்பட்ட திரவங்கள் அடங்கிய போத்தல்கள், அத்திரவங்களில் ஏற்பட்ட இரசாயன மாற்றங்களால் வெடித்துள்ளன.

இதற்கிடையே சமையல் எரிவாயு காரணமாக, நாளொன்றுக்கு சுமார் பத்துக்கு அதிகமான விபத்துகள் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது. அதற்கும் தீர்வு காணமுடியாமல், அரசாங்கம் தடுமாறுகிறது. எரிவாயு சம்பந்தப்பட்ட விபத்தொன்றில் ஒரு பெண்ணும் உயிரிழந்துள்ளார். எனவே, உயிர் ஆபத்தை விளைவிக்கும் ஒரு விடயமாக, இப்போது இது மாறியுள்ளது.

உரப் பிரச்சினை என்பது, அரசாங்கத்தின் தூரநோக்கின்மையின் நேரடி விளைவாகும். சேதனப் பசளையை இறக்குமதி செய்வதற்கு முன்னர் அதன் விளைவுகளை, கமநலத்துறை நிபுணர்களிடமும் விவசாய அமைப்புகளிடமும், அரசாங்கம் விசாரித்து அறிந்து இருக்க வேண்டும்.

இரசாயன உரம் இறக்குமதி செய்வதைத் தடை செய்தால், விவசாயிகள் எவ்வாறு தமது விவசாயத்தைத் தொடர்வது என்பதைப் பற்றி, அரசாங்கத்திடம் ஒரு மாற்றுத் திட்டம் இருக்க வேண்டும். சேதனப் பசளைதான் மாற்றுத் தீர்வு என்றால், அதைப் பெறுவது எவ்வாறு? எந்தெந்தப் பயிருக்கு எந்தெந்த சேதனப் பசளையை உபயோகிப்பது? அவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்வதா? வெளிநாட்டு சேதன பசளையால் தேசிய விவசாயத்துக்கு ஏதாவது பாதமான விளைவுகள் ஏற்படுமா போன்ற பல கோணங்களில் ஆராய்ந்தே, அவ்வாறானதொரு விடயத்தில் கைவைத்திருக்க வேண்டும்.

சேதனப் பசளைத் திட்டம் தோல்வியடைந்ததால், நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். அப்போது உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக, வெளிநாட்டு செலாவணியைத் தேட வேண்டிவரும். அதாவது, வெளிநாட்டு செலாவணியைச் சேமிப்பதற்காக, சேதனப் பசளைத் திட்டத்தைத் திடீரென ஆரம்பித்த அரசாங்கம், உணவுப் பற்றாக்குறையால் அதை விடக் கூடுதலாக வெளிநாட்டு செலாவணியைச் செலவழிக்க நேரிடும் என்பதை, முன்கூட்டியே அறிந்திருக்க வேண்டும்.

சமையல் எரிவாயுப் பிரச்சினையும் அரச நிறுவனங்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளின் விளைவாகும். கடந்த ஏப்ரல் மாதம், அரச நிறுவனமான லிட்ரோ நிறுவனம், தாம் விற்கும் எரிவாயுவின் கலவையை மாற்றியது. அத்தோடு, எரிவாயு சிலிண்டரில் உள்ள எரிவாயுவின் அளவையும், பாவனையாளர்களுக்குத் தெரியாமல் குறைத்தது. மக்கள் அதனை விளங்கிக் கொள்ளாமல் இருக்க, எரிவாயு சிலிண்டரில் எரிவாயு அளவை கிலோ கிராம் அலகில் இருந்து லீட்டர் அலகில் குறிப்பிட்டது.

எரிவாயு கலவையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தின் காரணமாக, சிலிண்டருக்குள் அழுத்தம் அதிகரித்தது. அதுவரை மக்கள் பாவித்து வந்த ரெகியுலேட்டர், எரிவாயு குழாய் போன்ற கருவிகளால், அந்த அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது போனமையே, எரிவாயு சம்பந்தப்பட்ட வெடிப்புகளுக்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

இதற்குப் பரிகாரமாக, எரிவாயு நிறுவனங்கள், சிலிண்டருக்குள் அழுத்தத்தை அதிகரிக்கும் கலவையில் மாற்றமேதும் செய்யாது, எரிவாயு கசிந்தால் எளிதில் மக்கள் அதனை அறிந்து கொள்வதற்காக நாற்றமடிக்கும் திரவம் ஒன்றை எரிவாயுவில் கலந்து, மீண்டும் எரிவாயுவை விநியோகித்து வருகின்றன. அதனால் வெடிப்புகள், தீ விபத்துகளைத் தடுக்க முடியாமல் இருக்கிறது.

விலைவாசி அதிகரிப்புக்கும் அரசாங்கம் வழங்கி இருக்கும் தீர்வு, நகைப்புக்கு உரியதாகவே இருக்கிறது. இம்மாதம் நத்தார் பண்டிகை வருவதால், இம்மாதம் 31 ஆம் திகதி வரை மட்டும், சதோச நிறுவனத்தில் மட்டும், குறைந்த விலைக்கு சில பொருட்களை விநியோகம் செய்வதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொதுவாக, நாடெங்கிலும் நூற்றுக் கணக்கான தனியார் கடைகளுக்கு மத்தியில் ஒரு சதோச கடை வீதம் தான் இருக்கிறது. அந்த நூற்றுக் கணக்கான கடைகளில் பொருட்களை கொள்வனவு செய்யும் மக்கள் அனைவருக்கும், சதோச நிறுவனத்தின் மூலம் பொருட்களை வழங்க முடியாது.

திறமையற்றதும் தூரநோக்கற்றதுமான நிர்வாகமே, இவை அனைத்துக்கும் காரணமாகும். நிர்வாக விடயங்களில், தாம் அனுபவமற்றவர் என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவே அண்மையில் கூறியிருந்தார். ஆனால், இந்த விடயங்களில் அவருக்கு ஆலோசனை வழங்க, பொருத்தமான ஆலோசகர்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

இருந்தாலும் அவர், அவர்களின் ஆலோசனைகளைக் கேட்கிறாரோ தெரியாது. அதேவேளை, அரசாங்கத்துக்கு வெளியே இருந்து, பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள், விமர்சனங்கள் மூலம் வழங்கும் ஆலோசனைகளை அரசாங்கம் ஏற்பதாகவும் தெரியவில்லை.

உதாரணமாக, வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினை தீரும் என்பதற்கான எந்தவோர் அறிகுறியும் இல்லை. ஒன்றில் அரசாங்கம், ஐ.தே.கவும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூறுவதைப் போல், சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் அல்லது ஏனைய உதவிகளைக் கோர வேண்டும். அல்லது, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கூறுவதைப் போல், கடன் வழங்கிய நாடுகளை அணுகி, கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை மாற்றித் தருமாறு கேட்க வேண்டும். அமைச்சர்கள், அதிகாரிகள் அச்சத்தின் காரணமாகவும் சந்தர்ப்பவாதத்தின் காரணமாகவும், எல்லாவற்றுக்கும் 'ஆமாம் சாமி' என்று கூறிவிட்டு, தமது சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதில் மட்டும் அக்கறை செலுத்தும் நிலையே இருக்கிறது.

பாரியளவில் விவசாயத்தில் ஈடுபடும் ஆளும் கட்சி எம்.பிக்களாவது, திடீரென இரசாயன உரம் இறக்குமதி செய்வதைத் தடைசெய்யும் போது, அதன் விளைவைப் பற்றி எடுத்துக் கூற முன்வரவில்லை.

துறைசார் நிபுணர்கள், அமைச்சரவையில் இல்லை என்றே கூற வேண்டும். இருந்தாலும், அவர்களுக்குப் பொருத்தமான பொறுப்புகள் வழங்கப்படுவதில்லை. வழங்கப்பட்டாலும் அவர்கள் சுதந்திரமாக முடிவுகளை எடுப்பதில்லை.

வைரஸ்துறை மருத்துவர்களான சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண ஆகியோர் புறக்கணிக்கப்பட்டு, சட்டத்தரணியான பவித்திராவும் அங்கும் இங்கும் பாயும் வெறும் அரசியல்வாதியான கெஹெலியவும், கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டனர்.

இதுவரை, கொரோனா தடுப்புக்கான விசேட செயலணியின் தலைவராக, மருத்துவர் ஒருவருக்குப் பதிலாக இராணுவத் தளபதியே நியமிக்கப்பட்டு இருந்தார். இப்போது அவர், சேதனப் பசளை மூலமான விவசாயத்தை முன்னேற்றும் ஒரு குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

நாட்டில் எத்தனையோ தலைசிறந்த சட்டத்தரணிகள் இருக்க, நாட்டில் ஒரே சட்டத்தைக் கொண்டு வர, ஒரு குழு நியமிக்கப்பட்டு, இன ஐக்கியத்துக்கு எதிராக மிக மோசமாகச் செயற்பட்ட ஒருவர், அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சில சமூகங்கள் மத்தியில் தனித்துவமாக இருக்கும் சட்டங்களை இல்லாமல் செய்வதே, அந்தக் குழுவின் நோக்கமாகும். ஆனால், அதற்கிடையே வெளிநாட்டமைச்சர், முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களை அழைத்து, சமூகங்களுக்கான தனியார் சட்டங்கள் தொடரும் என்று கூறி, பொருளாதார உதவி கேட்கிறார்.

அத்தோடு, மனித உரிமைகள் பிரச்சினையும் இவர்களை விரட்டி வருகிறது. மிகக் கடுமையாக இல்லாவிட்டாலும், ஐ.நாவின் பிடியும் இறுகிக் கொண்டே வருகிறது. மனித உரிமைகள் பிரச்சினை காரணமாக, அமெரிக்கா கடந்த வாரம், இரண்டு இலங்கையர்களுக்கு தனது நாட்டுக்குள் பிரவேசிப்பதற்குத் தடை விதித்தது. அவர்களில் ஒருவர், மிருசுவிலில் குழந்தைகள் உள்ளிட்ட ஒரு குடும்பத்தையே வெட்டிக் கொன்ற இராணுவ அதிகாரியான சுனில் ரத்னாயக்க என்பவராவார். ஜனாதிபதி, அவருக்கு மன்னிப்பு வழங்கியிருந்த நிலையிலேயே, அமெரிக்கா இந்தத் தடையை விதித்துள்ளது. இது ஜனாதிபதியின் முகத்தில் அறைந்ததற்குச் சமமாகும். அதேவேளை, 11 இளைஞர்களைக் கடத்திக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்று, அவருக்கு வட மேல் மாகாண சபையின் ஆளுநர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவற்றின் சர்வதேச தாக்கத்தைப் பற்றி, ஜனாதிபதியை அறிவூட்டத்தக்க ஆளுமையுள்ள எவரும் அரசாங்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், இந்த நிலைமைக்குப் பிரதான காரணமாகும். அத்திருத்தத்தின் மூலம், ஜனாதிபதிக்கே சகல விடயங்களிலும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சகலவற்றையும், தனி நபர் ஒருவர் தீர்மானிக்கும் நிலைமை உருவாகி இருக்கிறது. அமைச்சர்களும் துறைசார் நிபுணர்களும் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் முடிவெடுக்கும் நிலைமை இப்போது இல்லை. ஜனாதிபதிக்கு ஆளுமையோடு வழிகாட்ட, நாட்டில் எவரும் இருப்பதாகவும் தெரியவில்லை.

## கடிதங்கள்

### பாலைப்பாணிக்கு ஏன் இந்தப் பாராமுகம்?

முல்லைத்தீவு, பாலைப்பாணி கிராமத்துக்கான பிரதான வீதி, கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமை, போக்குவரத்து வசதியின்மை, தொழில் வாய்ப்பின்மை என்பவற்றால், இப்பிரதேசத்தில் வாழும் 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

பாலைப்பாணி கிராமத்தில், கடந்த காலங்களில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தநிலையில், யுத்தம் காரணமாக அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்து, தமிழகத்துக்குச் சென்றிருந்தனர். யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து, 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறின. 10 ஆண்டுகளாகிய நிலையிலும் மேற்படி கிராமத்திற்கான பிரதான வீதியாக காணப்படும் வன்னிவிளாங்குளம் - மூன்றுமுறிப்பு வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன், மழைக்காலங்களில் மக்கள் பயணிக்க முடியாதுள்ளது.

இதனைவிட, குறித்த கிராமத்தில் காட்டுயானைகளின் அச்சுறுத்தல் தினமும் இருப்பதுடன், பாலப்பாணி கிராமத்தில் இருந்து வன்னிவிளாங்குளம், மாங்குளம் உள்ளிட்ட பாடசாலைகளுக்குத் தினமும் ஒன்பது கிலோ மீற்றர் தூரம், காட்டுப் பாதை வழியாகப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், யானைகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாகவும் கிராமமக்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, கிராமத்தில் வாழும் அனைத்து குடும்பங்களும் தற்போது எந்தவித தொழில் வாய்ப்புகளும் இன்றியே வாழ்ந்து வருவதாகவும் விவசாயத்தை நம்பி வாழும் தாங்கள், தற்போது விவசாயத்திற்குத் தேவையான களைநாசினி, உரவகைகள் இல்லாத நிலையில் அதனையும் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். எனவே, பாலைப்பாணி மக்களின் குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–யது பாஸ்கரன்

காசி

## மகாத்மாவின் பெயரில் இலாபம் அடைந்தவர்கள்
# கனவை நனவாக்கவில்லை
### உத்தரபிரதேச முதலமைச்சர் விமர்சனம்




மகாத்மா காந்தியின் பெயரை வைத்து அரசியல் இலாபம் கண்டவர்கள், அவரது கனவை நனவாக்கவில்லை என காசி விஸ்வநாதர் கோவில் திறப்பு விழாவில் பேசிய உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், காங்கிரஸ் கட்சியை விமர்சித்துள்ளார்.

உத்தர பிரதேசத்தின் வாரணாசி தொகுதி லோக்சபா உறுப்பினரான பிரதமர் மோடி, அந்தத் தொகுதியை மேம்படுத்துவதில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறார். புனரமைக்கப்பட்ட புதிய கோவிலை, பிரதமர் மோடி திறந்து வைத்து, காசியின் பெருமைகள் குறித்து உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து, உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மகாத்மா காந்தி குறித்துக் கருத்து தெரிவித்து, சூசகமாக காங்கிரஸை விமர்சித்தார்.

மகாத்மா காந்தி, காசி விஸ்வநாதர் கோவிலை உலக அளவில் பிரபலமாக்க விரும்பியிருந்தார். மகாத்மா காந்தி, 100 ஆண்டுகளுக்கு முன்பு புனிதமான காசி நகருக்கு, காந்தி வருகை தந்தபோது, குறுகிய தெருக்களையும் அசுத்தங்களையும் கண்டு வேதனை தெரிவித்தார். காந்தியின் பெயரால் பலர் அரசியல் இலாபம் கண்டு ஆட்சிக்கு வந்துள்ளனர். ஆனால் அவரது அற்புதமான காசி, கனவை நனவாக்கவில்லை. தற்போது பிரதமர் மோடியின் ஆட்சியில் மகாத்மா காந்தியின் கனவு நனவாக்கப்பட்டுள்ளது என்று அவர் பேசினார்.

பாட்னா

## மருமகள் பெயரை லாலு
# மாற்றியதால் சர்ச்சை



புதிதாக திருமணம் முடித்துக்கொண்டுவந்த மருமகள் ரேச்சல் கொடின்ஹோவின் பெயரை ராஜஸ்ரீ என்று மாற்றியுள்ளார் முன்னாள் பீஹார் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ்.

இதனால் சர்ச்சை வெடித்துள்ளது. கிறிஸ்தவ மத பெண்ணின் பெயரை, இந்து மதப் பெயருக்கு லாலு பிரசாத் யாதவ் மாற்றியுள்ளதற்கு என்ன காரணம் என்று கேள்வி எழுந்துள்ளது.

இதற்கிடையே கிறிஸ்தவமத பெண்ணை லாலு பிரசாத்தின் மகன் தேஜஸ்வி திருமணம் செய்திருப்பதற்கு, லாலுவின் மைத்துனரும், தேஜஸ்வியின் தாய்மாமனுமான சாது யாதவ் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார். "லாலு வீட்டுக்கு இனி நான் வரமாட்டேன். இனிமேல் அவர் வீட்டில் நடக்கும் எந்த விசேஷத்துக்கும் வரமாட்டேன். தேஜஸ்விக்கு சரியான பாடம் புகட்டுவேன்" என்றும் அவர் கோபமாககக் கூறியுள்ளார்.

லாலுவின் இளைய மகன் தேஜஸ்வி யாதவும், அவரது நீண்ட நாள் தோழியுமான ரேச்சல் கொடின்ஹோவும் புதுடெல்லியில் வைத்து எளிய முறையில் திருமணம் செய்து கொண்டனர். இரு வீட்டார் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மட்டும் இதில் கலந்து கொண்டனர்.

புது மனைவியுடன் பீஹாருக்கு திரும்பிய தேஜஸ்வி, அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில், "எனது மனைவியின் பெயரை உச்சரிப்பதற்கு சிரமமாக இருக்கிறது என்பதற்காக அவரது பெயரை ராஜஸ்ரீ என்று எனது தந்தை மாற்றியுள்ளார்.

எனது தாய்மாமாவின் கோபம் குறித்து நான் அறிவேன். அவர் குழப்பமடைந்திருக்கிறார். அவர் மீது நிறைய மரியாதை வைத்திருக்கிறேன். அதனால் அவர் கூறியது குறித்து நான் கருத்துக் கூற விரும்பவில்லை. புதிய சிந்தனைகளுடன் கூடிய புதிய தலைமுறை நாங்கள். பாகுபாடுகளை நாங்கள் விரும்புவதில்லை" என்றார்.

வாரணாசி

## பணியாளர்களுடன் சேர்ந்து
# உணவு உட்கொண்டார் மோடி




பணியாளர்களுடன் சேர்ந்து பிரதமர் நரேந்திர மோடி புகைப்படம் எடுத்துக் கொண்டதோடு, அவர்களுடன் சேர்ந்து மதிய உணவும் உட்கொண்டார்.

உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள வாரணாசி மக்களவைத் தொகுதி, பிரதமர் நரேந்திர மோடியின் சொந்தத் தொகுதியாகும். இத்தொகுதிக்கு இரண்டு நாள் சுற்றுப் பயணமாக பிரதமர் மோடி சென்றிருந்தார். அங்கிருக்கும் கால பைரவர் கோவிலில் சிறப்பு வழிபாடு நடத்திய பிரதமர, அங்கிருந்து இரண்டடுக்கு படகில் பயணம் மேற்கொண்டார்.

வழிநெடுகிலும் பொது மக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்பொழுது அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர், பிரதமர் நரேந்திர மோடிக்கு, தலைப்பாகை மற்றும் துண்டு பரிசு அளித்தார். இதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதி மறுத்தனர். எனினும், பிரதமர் நரேந்திர மோடியே காரை நிறுத்தி பரிசை ஏற்றுக் கொண்டார்.

அதன்பின்னர், காசி விஸ்வநாதர் கோவில் வளாக கட்டட பணியில் ஈடுபட்ட பணியாளர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி புகைப்படம் எடுத்துக் கொண்டார். அவர்களுடன் சேர்ந்து மதிய உணவும் சாப்பிட்டார்.

சென்னை

# உதயநிதியை துணை முதலமைச்சராக்க
### காங்கிரஸில் குரல்



உதயநிதி ஸ்டாலினை துணை முதலமைச்சராக்க வேண்டுமென முதலமைச்சர் ஸ்டாலினுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது.

உதயநிதி முதன்முறையாக எம்.எல்.ஏ ஆன உடனேயே அமைச்சர் பொறுப்பு அவருக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஸ்டாலின் மறுத்துவிட்டார். உதயாவுக்கு அமைச்சர் பதவி வழங்க குடும்பத்திலிருந்தும் அழுத்தங்கள் வரத் தொடங்கின.

இந்தக் கோரிக்கை தற்போது கூட்டணிக் கட்சியிலிருந்தும் வரத் தொடங்கியுள்ளது.

தமிழக காங்கிரஸ் கட்சியின் விவசாயப் பிரிவு மாநில பொதுச்செயலாளர் ஆர். எஸ்.ராஜன் இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மனுவொன்றை அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில், பல்வேறு படிநிலைகளை கடந்து இந்தப் பொறுப்புக்கு வந்திருந்திருக்கிறீர்கள். தன் இல்லத்திலேயே கருணாநிதி, மு.க.ஸ்டாலின் என இருவரையும் பார்த்தே வளர்ந்ததால், இருவரது ஆற்றலையும் இந்த இளம் வயதிலேயே ஆழமாக உள்வாங்கி இருக்கிறார் உதயநிதி.

எனவே, அவருக்கு இருக்கும் ஆழ்ந்த அரசியல் அறிவு, மக்களோடு இருக்கும் நெருக்கம், கட்சியினரோடு இருக்கும் பிடிப்பு, இதையெல்லாம் மதிப்பீடு செய்து, அவருக்கு துணை முதலமைச்சர் பதவி வழங்க வேண்டும்.

இளம் தலைமுறையினர் மத்தியில் சமத்துவ சிந்தனையை வளர்க்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது. அதற்கு எல்லா மக்களும் விரும்பும், அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உதயநிதிக்கு துணை முதலமைச்சர் பதவி கொடுப்பது பொருத்தமானதாக இருக்கும்' எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆர்.எஸ்.ராஜன், ஏற்கெனவே காங்கிரஸிலிருந்து விலகி ரஜினியோடு பயணித்தார். ரஜினி கட்சி தொடங்கும் முடிவை கைவிட்டதுடன் அவரை விமர்சித்து பின்னர் மீண்டும் காங்கிரஸில் இணைந்தவருக்கு விவசாயப் பிரிவு மாநில பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டது.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்




தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கப்பூர் சென்றுள்ளார். இந்நிலையில், இவ்வாரத்துக்கான அமைச்சரவை சந்திப்பு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில், நேற்றுமுன்தினம் (13) இரவு நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில் சில...

### 01. டெங்கை கட்டுப்படுத்த தேசிய வேலைத்திட்டம்

ஆபத்தான நிலையை எட்டியுள்ள டெங்கு நோய்ப் பரவல், பருவப்பெயர்ச்சி மழைக்காலத்தில் மேலும் அதிகரிக்கும் போக்குக் காணப்படுவதால், தொற்று நிலைமையைத் தடுப்பதற்கான குறித்த அனைத்துத் தரப்பினரின் பங்குபற்றலுடன் அமைச்சின் ஊடாக ஒன்றிணைந்த தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி சமர்ப்பித்திருந்த கீழ்வரும் யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

- டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை நிரந்தரமாக மேற்கொண்டு செல்வதற்கு அனைத்து நிறுவனத்திலும் அதற்கென ஓர் அலுவலரை நியமித்தல்.
- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆகியவற்றில் விடயங்களை மீளாய்வு செய்து, தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக மாகாண, மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் பொறுப்புகளை ஆளுநர்களுக்கு ஒப்படைத்தல்.
- டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாகத் தற்போது காணப்படும் சட்ட ஒழுங்குகளை இற்றைப்படுத்தல்.
- டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பு செய்வதற்கான பொறுப்பை, தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவுக்கு ஒப்படைத்தல்.

### 02. 'இலத்திரனியல் – கிராம அலுவலர்'

குடியிருப்பாளர் பட்டியலைப் பேணிச் செல்லும் முறை, தற்போது நடைமுறையில் இன்மையால், குடியிருப்பாளர்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்தி சான்றிதழை வழங்கும் போது, வாக்காளர் இடாப்பு போன்ற வேறு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, கிராம உத்தியோகத்தர்கள் கடமைகளை மேற்கொள்வதால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

தற்போது உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் 'இலத்திரனியல் - கிராம அலுவலர்' (e-GN) கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதுடன், அதன்கீழ் குடியிருப்பாளரின் தரவுத் தொகுதி தயாரிக்கப்பட்டு, குறித்த கருத்திட்டத்தை 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக கட்டங்கட்டமாக நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சமுதாய அடிப்படையிலான தரவுத் தொகுதியின் மூலம், நபரொருவரின் சமகால வதிவிடத்தை மிகவும் சரியான வகையில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். அதற்கமைய, முன்னர் காணப்பட்ட குடியிருப்பாளர் பட்டியல் முறைமையின் தேவைக்கு, தேசிய தரவுத் தொகுதியாக 'இலத்திரனியல் - கிராம அலுவலர்' (e-GN) கருத்திட்டத்தின் தரவுத் தொகுதியை, கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03. நகரப் பிரதேசங்களை அடையாளம் காணல்

நகரப் பிரதேசமாக வகைப்படுத்தும் போது, அதற்காகப் பிரயோகிக்கும் முக்கியமான குறிகாட்டியாக 'நிர்வாக ரீதியான அலகு' பயன்படுத்தப்படும். அதற்கமைய, மாநகர சபை, நகர சபைகள் மாத்திரம் தற்போது உத்தியோகபூர்வமாக நகரப் பிரதேசங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த குறிகாட்டிகளில் காணப்படும் குறைபாடுகளால் கூடுதலாக நகரமயமாகிய பிரதேசங்கள் இன்னும் கிராமிய பிரதேசங்களாகவே இனங்காணப்படுவதால், நகரமயமாதல் பற்றிய சரியான வரைவிலக்கணப்படுத்தலின் தேவை உருவாகியுள்ளது.

நகர அபிவிருத்திப் பிரதேசத்தைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஆலோசனைக் குழுவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு, பிரதேச சபை எல்லைகளில் அமைந்துள்ள நகரப் பிரதேசங்களை அடையாளம் காண்பதற்கும், குறித்த குழுவின் பரிந்துரைகளுக்கமைய பிரதேச சபை எல்லைகளில் அடையாளம் காணப்படும் நகர பிரதேசங்களை நகர மற்றும் கிராமங்களை உருவாக்கும் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பிரகடனப்படுத்துவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 04. புரிந்துணர்வு ஒப்பந்தம்

இரு தரப்பினருக்கும் இடையேயான உயர்கல்வி ஒத்துழைப்புக்காக உருகுணை பல்கலைக்கழகத்துக்கும் ஜப்பான் ஹொக்கயிடோ பன்கியோ பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்கள் செல்லுபடியாகும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் பீடங்கள், ஆய்வாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர் குழாம் பரிமாறல், மாணவர் பரிமாறல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், இருதரப்பினர்களுக்கிடையே ஒன்றிணைந்த ஆய்வுகளை மேம்படுத்தல், கல்வி ரீதியான தகவல்கள், பொருட்களைப் பரிமாற்றிக் கொள்ளல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான யோசனைக்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 05. யால வலயம் VI ஐ பிரகடனப்படுத்தல்

23,499 ஹெக்டெயார் கொண்ட யால கிழக்கு பாதுகாப்பு வன வலயம் மற்றும் உடவளவை தேசிய பூங்காவின் கிழக்குப் பகுதி, இடம்பெயரும் யானைகளின் தங்குமிடமாக 1995 ஆம் ஆண்டில் 'லுனுகம்வெஹெர தேசிய பூங்கா' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தேசிய பூங்கா, யால தேசிய பூங்காவுக்கு ஒத்த காலநிலை இயல்புகளுடன் கூடியதாக இருப்பதுடன், இரண்டு தேசிய பூங்காக்களிலும் வாழும் விலங்குளின் விசேட இயல்புகளும் ஒத்ததாகும். அதனால், ஒத்த காலநிலை இயல்புகள், உயிர்ப்பல்வகைமை, சுற்றாடல் இயல்புகளுடன் கூடிய தேசிய பூங்காக்கள் இரண்டாக பேணிச் செல்வதற்குப் பதிலாக, லுனுகம்வெஹெர தேசிய பூங்கா, யால தேசிய பூங்காவின் வலய இலக்கம் VI எனப் பிரகடனப்படுத்து வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 06. காணிகளை ஒதுக்கி வழங்கல்

பிரதேச தொழிற்சாலைகள் வேலைத்திட்டமானது, பிரதேச ரீதியாக கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியமான வேலைத்திட்டமாகும்.

'பிரதேச கைத்தொழில் சேவைகள் குழு' மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் 'அமைச்சின் கருத்திட்டங்கள் மதிப்பீட்டுக் குழு' கருத்திட்ட முன்மொழிவுகளின் முழுமையான மதிப்பீட்டின் பின்னர் மேற்கொள்ளப்படும். அதற்கமைய, மேற்குறிப்பிட்ட குழுக்கள் மூலம் 27 கருத்திட்ட முன்மொழிவுகளை ஆராய்ந்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக 15 கைத்தொழில் பேட்டைகளில் காணித் துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள முதலீட்டாளர்களால் 4,523.34 மில்லியன் ரூபாய்களை முதலிடுவதற்கும் 2,477 நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த முதலீட்டாளர்களுக்கு 35 வருடகால நீண்டகால குத்தகை அடிப்படையில் காணித்துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 07. காணியை ஒப்படைத்தல்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம், விருந்தோம்பல் துறை மற்றும் சுற்றுலாத்துறையில் பல்வேறு துறைகளுக்கு இளைஞர் யுவதிகளை பயிற்றுவிப்பதற்காக நாடளாவிய ரீதியில் ஒன்பது (09) மாகாணங்களையும் உள்ளடக்கியதாக பயிற்சி நிலையங்களை நடத்தி வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகத்திலிருந்த 0.545 ஹெக்ரெயார் காணியில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் குண்டசாலை ஹோட்டல் பாடசாலை தாபிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஹோட்டல் பாடசாலை, 2009 ஆம் ஆண்டில் 450 மில்லியன்கள் வரை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டாலும், குறித்த காணிக்கான சட்டபூர்வமான உரித்து இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு இதுவரை கிடைக்கவில்லை. அதனால், குறித்த காணித்துண்டை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கலாக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 08. கட்டளைச் சட்டத்தில் திருத்தம்

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள வழங்கல் பத்திரங்களின் உள்வாங்கப்பட்டுள்ள ஒருசில நிபந்தனைகளால் வழங்கல் பத்திரங்களுக்குரிய காணிகளிலிருந்து உச்சப் பயன்களைப் பெறுவதற்கான இயலுமை இல்லையென்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், குறித்த நிபந்தனைகளை பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் திருத்தம் செய்வதற்கு இயலுமான வகையில் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

ஜப்பான்

# ஜப்பான் பிரதமரின் இல்லத்தில் பேய்?



கடந்த 1963ஆம் ஆண்டு ஜப்பானில் இடம்பெற்ற ஆட்சி கவிழ்ப்பு முயற்சியின் போது, தலைநகர் டோக்கியோவில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் புகுந்த இராணுவ வீரர்கள் சிலர், அமைச்சர் ஒருவர் உட்பட அதிகாரிகள் பலரைச் சுட்டுக் கொலை செய்தனர்.

அதன் பின்னர், அந்நாட்டுப் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பேய்கள் இருப்பதாக கட்டுக்கதைகள் எழுந்தன. இதனால் சில பிரதமர்கள் அங்கு தங்குவதைத் தவிர்த்து வந்தனர்.

குறிப்பாக, கடந்த எட்டு ஆண்டுகள் பிரதமராக இருந்த ஷின்ஜோ அபே மற்றும் அவருக்கு பின்னர் ஓராண்டு மட்டும் பிரதமர் பதவி வகித்த யோஷிஹைட் சுகா ஆகிய இருவருமே பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்குவதைத் தவிர்த்தனர்.
இந்நிலையில், கடந்த ஒக்டோபர் மாதம் ஜப்பானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற புமியோ கிஷிடோவிடம் பலரும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்குவதைத் தவிர்க்கும்படி கூறினர்.
ஆனால், அதையும் மீறி புமியோ கிஷிடோ, பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அண்மையில் குடிவந்தார்.

இந்நிலையில், அங்கு முதல் நாளை எப்படிக் கழித்தீர்கள் என பிரதமரிடம் நிருபர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு "நேற்று, இரவு நான் நன்றாகத் தூங்கினேன். இதுவரை அந்த மாளிகையில் பேய், பிசாசை நான் பார்க்கவில்லை" எனப் பதிலளித்துள்ளார்.

ரஷ்யா

# கார் ஓட்டுநராகப் பணியாற்றிய ரஷ்ய ஜனாதிபதி



உலகின் மிகவும் அதிகாரம் மிக்க தலைவர்களில் ஒருவரான ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கார் ஓட்டுநராகப் பணியாற்றியுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சோசலிச நாடுகளின் கூட்டமைப்பான சோவியத் ஒன்றியம், கடந்த 1991ஆம் ஆண்டு வீழ்ச்சியடைந்த போதே ரஷ்யா உட்பட பல்வேறு குடியரசு நாடுகள் தோற்றம் பெற்றன.

இதன் போது, சோவியத் ஒன்றியத்தின் உளவு படையில் பணியாற்றிய ரஷ்யாவின் தற்போதைய ஜனாதிபதி புடின், அக்காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, கார் ஓட்டுநராகப் பணியாற்றியதாகத் தெரிவித்துள்ளார்.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி குறித்து எடுக்கப்பட்ட ஆவணப்படம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

30 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி என்பது, பெரும்பாலான மக்களுக்கு மிகப் பெரிய சோகமாகவே இருந்தது. அந்த நேரத்தில், நான் கூடுதல் பணம் சம்பாதிக்க வேண்டியிருந்தது. இதற்காகவே தனியார் நிறுவனமொன்றில் கார் ஓட்டுநராகப் பணியாற்றினேன்" என்றார்.

அமெரிக்கா

# 2021ஆம் ஆண்டின் சிறந்த நபர்




2021ஆம் ஆண்டின் சிறந்த நபராக டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும் அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க் என்பவரை டைம்ஸ் நிறுவனம் தெரிவு செய்துள்ளது.

அத்துடன், டைம்ஸ் பத்திரிக்கையின் அட்டைப் படத்திலும் எலான் மஸ்க்கின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.

மேலும் எலான் மஸ்க், டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ், ஸ்டார்லிங்க், நியூராலிங், கிரிப்டோகரண்சி முதலீடு என அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து வருகின்றார் என அப்பத்திரிக்கை புகழாரம் சூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசியா

# குலுங்கியது இந்தோனேஷியா



இந்தோனேஷியாவில் மௌமரேவில் இருந்து சுமார் 95 கிலோ மீற்றர் வடக்கே நேற்று (14) சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 7.6 ஆக பதிவாகியுள்ளதால், கடலில் சுனாமி அலைகள் எழ வாய்ப்புள்ளதாகவும் பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல் வெளியாகவில்லை.

அமெரிக்கா

# விண்வெளிக்கு சுற்றுலா சென்ற மூதாட்டி



அமேசான் நிறுவனத்தின் ஸ்தாபகரும், உலகப் பணக்காரர்களுள் ஒருவருமான ஜெப் பெசோஸ் மனிதர்களைக் குறைந்த கட்டணத்தில் விண்வெளிக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லும் முயற்சியில் 'புளூ ஒரிஜின்' என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

அந்தவகையில் கடந்த ஜூலை மாதம் தனது நிறுவனத்தின் தயாரிப்பான நியூ ஷெப்பர்ட் (NewShepherd) விண்கலத்தின் மூலம் ஜெப் பெசோஸ் விண்வெளிக்கு சென்று வந்தார். இது மிகப்பெரும் மைல்கல் சாதனையாக பார்க்கப்பட்டது.
இந்நிலையில் அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரரான அலன் ஷெப்பர்ட்டின் மகளான 74 வயதான லாரா ஷெப்பர்ட் உள்ளிட்ட 6 பேரை கொண்ட குழு, புளூ ஆரிஜின் நிறுவனத்தின் மூலம் விண்வெளிக்கு சுற்றுலா சென்று திரும்பியது.
சுமார் 10 நிமிடங்களுக்கு நீடித்த இப்பயணத்தில் நியூ ஷெப்பர்ட் விண்கலமானது 100 கிலோ மீற்றர் உயரம் வரை பயணித்தமை குறிப்பிடத்தக்கது.

எல்.பி.எல்

# வொரியர்ஸை வென்ற ஸ்டார்ஸ்



லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற கண்டி வொரியர்ஸுடனான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்டார்ஸின் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய வொரியர்ஸ், கெனார் லூயிஸின் 62 (44), சரித் அஸலங்கவின் 28 (18) ஓட்டங்கள் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.


எனினும், பின்னர் வரிசையாக விக்கெட்டுகளை இழந்த நிலையில், 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில், துஷ்மந்த சமீர, 4-0-35-4, தனஞ்சய டி சில்வா 1-0-4-1, அஷான் பிரியஞ்சன் 4-1-21-1, நவீன்-உல்-ஹக் 3-0-17-1, சீக்குகே பிரசன்னா 4-0-31-1, ரவி ராம்போல் 4-0-34-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 147 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ், விக்கெட்டுகளை குறிப்பிட்ட இடைவெ தினேஷ் சந்திமாலின் 44 (27), பிரசன்னாவின் ஆட்டமிழக்காத 32 (06) ஓட்டங்களோடு 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.
பந்துவீச்சில், நிமேஷ் விமுக்தி 4-1-11-2, சரித் அஸலங்க 2-0-14-1, கமிந்து மெண்டிஸ் 4-0-29-1, சஷிந்து கொலம்பகே 4-0-34-1, பினுர பெர்ணான்டோ 4-1-34-0, அஞ்சலோ பெரேரா 1-0-8-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக பிரசன்னா தெரிவாகினார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஸ்டார்ஸை ஜஃப்னா கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தம்புள்ள ஜையன்ட்ஸை வொரியர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

# ஓய்வை இன்று அறிவிக்கவுள்ள அகுரோ?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான சேர்ஜியோ அகுரோ, இன்று ஓய்வை அறிவிக்கவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதய பிரச்சினைகள் காரணமாகவே 33 வயதான அகுரோ ஓய்வு பெறுகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதியாக இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி பார்சிலோனாவுக்காக விளையாடியிருந்த அகுரோ, 786 போட்டிகளில் 427 கோல்களைப் பெற்றிருந்தார்.

# இலங்கை அணியின் பயிற்சி ஆலோசகராக மஹேல




இலங்கை கிரிக்கெட் அணியின், 19 வயதுக்கு உட்பட்டோருக்கான, ஏ அணிகளின் பயிற்சி ஆலோசகராக, அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஓராண்டுக்கு இலங்கையணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அனைத்து அணிகளினதும் கிரிக்கெட் விடயத்துக்கு ஜெயவர்தன பொறுப்பாக இருப்பார் என்றும், வீரர்களுக்கும், இலங்கை கிரிக்கெட் சபையின் உயர் பெறுபேறு நிலையத்தில் அணிகளின் முகாமைத்துவத்துக்கும் ஆலோசனை வழங்குவார் என கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்திய பாகிஸ்தான்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் வென்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் பதில் அணித்தலைவர் நிக்கலஸ் பூரான், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் எனத் தெரிவித்தார்.

மே. தீவுகள் சார்பாக டொமினிக் ட்ரேக்ஸ் அறிமுகத்தை மேற்கொண்டதுடன், இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் ஷமராஹ் ப்ரூக்ஸ் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே அணித்தலைவர் பாபர் அஸாமை அகீல் ஹொஸைனிடமும், சிறிது நேரத்தில் பக்கர் ஸமனை றொமாரியோ ஷெப்பர்ட்டிடமும் இழந்தது.

எனினும், மொஹமட் றிஸ்வானின் 78 (52), ஹைதர் அலியின் 68 (39) ஓட்டங்களோடு இனிங்ஸைக் கட்டியெழுப்பிய பாகிஸ்தான், மொஹமட் நவாஸின் இறுதி நேர அதிரடியான ஆட்டமிழக்காத 30 (10) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் ஹொஸைன் 4-0-19-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, 201 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், குறிப்பிட்ட இடைவேளைகளில் விக்கெட்டுகளை இழந்து, 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களையே பெற்று 63 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
பந்துவீச்சில், மொஹமட் வாசிம் 4-0-40-4, ஷடாப் கான் 4-1-17-3, மொஹமட் நவாஸ் 4-0-24-1, ஷகீன் ஷா அஃப்ரிடி 4-0-35-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஹைதர் அலி தெரிவானார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில்

# றோஹித் இல்லை



தென்னாபிரிக்காவுக்கான இந்தியாவின் சுற்றுப்பயணத்துக்கான டெஸ்ட் தொடரிலிருந்து இடது பின்கால் தசைநார் உபாதை காரணமாக றோஹித் ஷர்மா விலகியுள்ளார்.

இந்நிலையில், குழாமில் ஷர்மாவை புதுமுகவீரர் பிரியங்க் பஞ்சால் பிரதியிட்டுள்ளார்.

அந்தவகையில், லோகேஷ் ராகுலும், மாயங்க் அகர்வாலும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 15 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.